கணபதிதுணை.


சைவ - எல்லப்பநாவலரால்

அருளிச்செய்யப்பட்ட

திருவருணைக்கலம்பகம்

மூலபாடம்

௫-ம் பதிப்பு.



இஃது,

ஊ-புஷ்பரத செட்டியாரால்

கலாரத்நாகரம்

என்னுந் தமது அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:

1891.

உ

கணபதிதுணை.

திருவருணைக்கலம்பகம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

அன்னவயல் சூழருணை யண்ணு மலையார்மேல்
மன்னுங் கலம்பகப்பா மாலைக்குத் - துன்னியசீர்
மெய்க்கோட்டு மேருவெனும் வெள்ளேட்டின் மீதெழுதும்
கைக்கோட்டு வாரணமே காப்பு.

கட்டளைக்கலித்துறை.

சைவத்தினை மேற்சமயம்வே றிலையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொரு
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமும் [ள்வாய்
உய்வைத்த ரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.

மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

இது எட்டடித்தரவு - க.

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளரு மாதவனும்
அணிகொண்ட புண்டரிக மகலாத சதுமுகனும்
ஞானக்கண் ணதுகொண்டு நாடிமா றுணராதே
ஏனத்தின் வடிவாகி யெகினத்தின் வடிவாகி
அடிதேடி யறிவலென வவனியெலா முழுதிடந்தும்
முடிதேடி வருவலென மூதண்ட மிசைப்பறந்தும்
காணரிய வொருபொருளாய்க் களங்கமற விளங்குபெருஞ்
சோணகிரி யெனநிறைந்த சுடரொளியாய் நின்றருள்வோய்.

இவை ஈரடித்தாழிசை - எ.

மலைமிசையி லிருப்பதற்கோ மலைசிலையா வெடுப்பதற
மலையரையன் மகிழ்வுதற்கோ மலையுருவ மெடுத்தனை
இத்தலத்தி லைந்தொழிலு மிருபிறப்போ ராறுதொழிலு
தத்துவமுந் திருமேனி தரித்திலையே லியலாவே.

இருக்காதி சதுர்வேத மிசைப்பதுநின் பலபேத
மொருக்காலு மொன்றுரைத்த தொன்றுரைக்க வறியா
கருமுடிவைத் தருகால கற்பமெலாங் கடக்கவுநின்
திருமுடியிற் பிறைசிறிதுந் தேயாது வளராதே.

தானவரைக் கடிந்துமலர்ச் சதுமுகனை யொழித்துமற்ற
வானவரை யழித்துநின்கை மழுப்படைவாய் மழுங்காதே
அண்டருக்கு முனிவருக்கு மழலான கொடுவிடத்தைக்
கண்டமட்டு நுகர்ந்திடவுங் கண்டமட்டிற் கடவாதே.

மூவாமை தனக்குநின்றன் முதனடுவீ றி ...மைமுந்
சாவாமை பிறவாமை தமக்குமிவை சான்றன்றே.

இவை நாற்சீரோரடியிரண்டுகொண்ட அம்போதரங்கம் - உ.

தடவரை நடைகெழு தரமென வருமொரு
கடகரி யுரிவிரி கலையென மருவினை.
படமுடை யரவொடு பகைபடு மும்பதி
நடையற வுடனுறை சடைகெடு முடியினை.

இவை முச்சீரோரடி அம்போதரங்கம் - ச.

சிலையென மலையை வளைத்தனை. (க)
திரிபுர மெரிய நகைத்தனை. (உ)
கலைமறை யிவுளி படைத்தனை. (ங)
சதிரவு னெயிறு புடைத்தனை. (ச)

இவை இருசீரோரடி அம்போதரங்கம்-அ.

விதி சிரத்தினை	(க)	நதி தரித்தனை	(ரு)
அகழ் கரத்தினை	(உ)	மதி பரித்தனை	(சா)
விடை நடத்தினை	(௩)	நாள்க ளாயினை	(எ)
பொது நடத்தினை	(ச)	கோள்க ளாயினை.	(அ)

இவைபெயர்த்தும் ஈரடித்தாழிசை-௩.

பண்ணுநீ சுவையுநீ பரிதியுநீ பனிக்கதிர்நீ
பெண்ணுநீ யாணுநீ பேதமுநீ யபேதமுநீ. (க)

செங்காலிற் கருங்காலன் சிரமுருள வுதைத்தனையே
சங்காழி முகுந்தனுக்குச் சங்காழி கொடுத்தனையே. (உ)

ஆராவு மளவிடுதற் கரியவுனை யொருகரத்து
நீராவு மலராவு நெஞ்சுருகப் பணலாமே. (௩)

இது தனிச்சொல்.

" எனவாங்கு.

இது பத்தடி நேரிசை ஆசிரியச்சுரிதகம்.

வேற்று மருந்தால் விடாதவெம் பிறவியை
மாற்று மருந்தா மலைமேன் மருந்தா
அழகிய நாயகி யருளுடை நாயகி
புழுகணி நாயகி பொருந்திய புனிதா
காசியி லிறந்துங் கமலையிற் பிறந்தும்
தேசமர் தில்லையுட் டிருநடங் கண்டும்
அரிதினிற் பெறும்பே றனைத்தையு மொருகால்
கருதினர்க் களிக்குங் கருணையை விரும்பி
அடைக்கலம் புகுந்தன னடியேன்
இடர்க்கடல் புகுதா தெடுத்தரு ளென்னவே. (க)

நேரிசைவெண்பா.

வேதநூல் சோணகிரி வித்தகர்க்கார் வேறுவார்
சோதிய மானவர் சோமனிவர் - ஆதவனும்

ஓதருணை வித்தகனை மூவரி லொருத்தனென
வோதியிடு மற்ப மதியீர்
சீதமதி வைத்தமுடி பாதமல ரைச்சிறிது
தேடுதனி னைத்த பரமே. (௬)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பரவை யாடினு நதிக ளாடினும்
படியெ லாநடந் தடிக டேயினும்
குரவ ராயினுங் கனலி னின்றதன்
கொதிபொ ருக்கினுங் கதிகி டைக்குமோ
அரவ மாடுசெஞ் சடில ரங்கணு
ரமுதர் தாணினைந் தடியர் தம்மொடு
விரவி நீறணிந் தருணை சேர்வரேல்
வெற்ற ராயினு முத்த ராவரே. (௭)

பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

முத்தமிழ்முறைமுறையன்பொடு
மப்பர்கவுணியர்சொல்சுந்தரர்
முப்பொழுதுமெதிர்புகழ்ந்திடு முதுநூலார்
அத்தரருணையினெடுந்திரை
தத்துதிருநதியின்மென்பெடை
யச்சமறவுடனணைந்துறை மடநாராய்
ஒத்தமனமொடுபுணர்ந்தவர்
சற்றுமகல்வதிலையென்றவ
ருற்றதுணையெனவிருந்தவ ருளம்வேறாய்
எத்தனைகபடநினைந்தவர்
கைப்பொருள்கருதிநடந்தன
ரெப்படியிறைவனைநம்புவ தினிநாமே. (௮)

ஆறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இனமகலு மருகர்மட மிசையிலிடு கனன்மதனை
யிறைவனுடல் புகமொழிவரோ

கனகமுக படகவள கரடதட விகடமத
  கரியின்மத மறவினைவரோ
வனமருவு மருமுதலை யொருமதலை தரவினிய
  மதுரகவி மொழிமுதல்வரோ
அனகரபி னயராதல ரமலரோம தருணைகிரி
  யடிகடம தடியவர்களே. (௯)

தலைவன்வினவுதல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அடியவர் சிந்தையி லினிதுறை சங்கர
  ரருணைவ ளம்பதி யன்றோ
படியினெ டுங்கரி யனையம தங்கொடு
  பதறிந டந்திடு மின்றோ
ஒடியு மருங்கென வுணர்விலர் நின்றினி
  யொருவச னஞ்சொல வொண்ணாதோ
கடியச ரங்களி னிளைஞரு டன்பல
  கலகவி தம்பயில் கண்ணுறோ (௧0)

அம்மானை - மடக்குத்தாழிசை.

நாரா யணனறியா நாதரரு ணேசருக்கு
வாரார் சிலைகலைமெய் மாதங்க மம்மானை
வாரார் சிலைகலைமெய் மாதங்க மாமாயின்
ஆராயுங் காலெடுப்ப தையமன்றோ வம்மானை
அன்னமதி யாரொடுப்ப தையமோ வம்மானை. (௧௧)

பாங்கி தலைவிக்குரைத்தல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மானென்பார் கலையென் பார்கைம்
  மலையென்பார் வழியே தென்பார்
ஏனென்பா ரிலையென் பார்யா
  னோக்குமாந் தழைநன் றென்பார்

ஊனென்பார் கிறையுந் தாரா
றுறையுந்தென் னருணை மானே
கானென்பார் குழலை வேந்தர்
கருத்தென்றே கருதுங் காலே. (௪௨)

புயவகுப்பு - ஆசிரியவண்ணவிருத்தம்.

கருணைமுக மண்டலத் தொளிர்மகர குண்டலக்
கலன்மலிக வின்குழைக் குறவாயிசைந்தன
களபமிகில் குங்குமத் தளறுகுடி கொண்டுதட்
டியபுழுக ணைந்துமெய்ப் பனிநீர்துளைந்தன
கலைமதிம ழுங்கிருத் தினமிருள டைந்துமுத்
தொளிகருக வெண்சுதைத் திருநீறணிந்தன
கனலிகைய ரிந்துகட் பரிதியைமு னிந்துதக்
கனைமுடித டிந்துமைத் தலையேவழங்கின. (௪௨௧)

இரணியனு ரங்கிழித் தளவறும் தங்கொழித்
தெழுநரம டங்கலைத் தடமார்பிடந்தன
இமயமட மங்கைபொற் புளகவிரு கொங்கையிற்
சுவடுபட வின்பமுற் றதிலேகுழைந்தன
இரவிகிர ணங்கொழித் ததிசயமு டன்கிளைத்
தெழுபவள வன்பொருப் பெனவேவளர்ந்தன
இதழியர விந்தமுற் பலமகிழ்செ ருந்திகட்
குரவலரி சண்பகத் தொடையாளிறைந்தன. (௪௨௨)

தரியலர்பு ரங்கெடச் சுரர்கரர்ப யங்கெடத்
தமனியநெ டுஞ்சிலைச் சிலைநாணெறிந்தன
தனுவலத னுஞ்செயற் கமர்பொருச ரந்தரச்
சரதமென வந்துமற் பொருபோர்புரிந்தன
சலசமலர் மண்டபச் சதுமுகவ யன்றிருந்
தலையுடனி லங்குமுத் தலைவேலுவந்தன
தடவிகட கும்பமத் தகதவள தந்தநற்
றறுகண்மத குஞ்சரத் துரிபோர்வைகொண்டன. (௪௨௩)

அருணகிர ணங்களிற் பலமணிநெ ருங்கிநச்-
சரவமிளிர் கங்கணப் பணியான்மலிந்தன
அனவரத மம்பலத் தினிடமி டுந்தொழிற்
கபினயவி தங்கள்பெற் றழகோடிருந்தன
அருமறைதெ ரிந்தசொற் புகலியிறை செந்தமிழ்க்
கரசினொடு சுந்தரப் பெருமாள்புகழ்ந்தன
அரிபிரமர் தங்களுக் கரியபத பங்கயத்
தருணையதி ருங்கழற் பெருமான்புயங்களே. (கங)

தலைவனைவேண்டல்

மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

புயந்தழுவுங் கண்ணியுஞ்செவ் விதழி யேமால்
பூண்டகயற் கண்ணியுஞ்செவ் விதழி யேமால்
வியந்துசொலி னன்னதும்பொன் னிறமே யெங்கண்
மின்னிறமும் பொன்னிறமே புயம்பெ ருமல்
அயாந்திவள்வா டத்தகுமோ வருட்கண் பாரீ
ரருணகிரிப் பெரியீரே யமல ரோநல்
வயந்தவிழா வழகரோ நினைக்க முத்தி
வரந்தருவா ரோமலைமேன் மருந்த னாரோ. (கச)

இரங்கல்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலைமேன் மருந்த ரருணேச ரன்று வலைவீசி நின்ற வலையே, அலைமே னிறைந்து வருமீ னருந்தி யருகே யிடங்கொள் குருகே, முலைமேன் முயங்கு தலைநாளி லன்பர் மொழிகூண் மறந்த பிழையோ, தலைமேல் வரைந்த படியோ விருந்து தமியேன் யருந்து தகவே. (கரு)

தலைவியைப்புகழ்தல்

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நகைமுறுவலின்மதனைமுனிபவர் சடையிலணிபலதலையினா
புகைலடியரொடுறையுமிறையவ ரருணைவளநகரிலையார்

நிகரிறனதடவமுதநிறைகுட நிலவுமுகபடம்விலகினால்
ஈசனவமரருசுரருமிகல்கொடு கலகமிடுவரிவ்வுலகிலே. (௧௬)

இதுவுமது.

மடக்கு - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உலககண் டகனாய் வருசலந் தரனா
ருடறடிந் திடுவார் கடல்விடங் கொளுவார்
குலவுசங் கரனா ரருணையங் கிரிசூழ்
குளிர்புனந் தனிலே கிளிகடிந் திடுவார்
மலர்முகஞ் சசியே வடிவமுஞ் சசியே
மகரமென் குழையே வருணமென் குழையே
முலையுமந் தரமே யிடையுமந் தரமே
மொழியுமா சுகமே விழியுமா சுகமே. (௧௭)

இரங்கல்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சுகமே சுகமே யிரும்வந் துபுனஞ்
சூழ்கின் றவுமைத் தினமித் தினையுட
புகமே யவிடா துகடிந் திடுமெம்
பொல்லா மையுமின் றுபொறுத் திடுமின்
யகமே ருநெடுஞ் சிலையா ளரனா
மலையா ரருணா புரிமால் வரைமேல்
அகமே செலுமா றுதுணிந் திதன்விட்
டகறுன் பழுமன் பர்வரிற் சொலுமே. (௧௮)

இதுவுமது-அறுசீர்க்கழிநெடில் ஆசியவிருத்தம்.

சொல்லா ரணத்திற் கரிவரியார்
சோணா சலத்திற் சுகங்கடமைக்
கல்லா லெறிந்த பகைக்குவழி
காட்டா தொழிதல் கண்டாயே

கொல்லா வம்புஞ் சமர்க்களத்திற்
குனியா வில்லுங் கொண்டுநிற்கும்
புல்லா டவனே யெமக்குறுதி
புகன்று ரெங்கே யகன்றாரோ. (௧௧)

பிரிவுவிலக்கல்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஆரும்வி ரும்பிய கல்விமே லாசையு மக்குள தாயிடின்
பாருற வென்பொரு பாவையாப் பாடிய பாவலர் போலவே
நீரும ருந்தமிழ் செப்பிடு நீர்மைய ரிந்திவ ணேகுவீர்
மேருநெ டுஞ்சிலை யத்தனார் வீறரு ணைபுரி வெற்பரோ. (௨௦)

காலம்-மடக்கு.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வெற்றிமதன் போர்க்காயம் பிறைக்குங் காலம்
வெங்கனலே போற்காயம் பிறைக்குங் காலம்
சற்றுமிரு கரமென்னே சங்கணியாக் காலம்
தலைவர்துறை மறந்தென்னே சங்கணியாக் காலம்
கற்றைநெடுஞ் சடைமுடியா ரடியார்மேன் முழுதுங்
கருணைநாட் டம்புரியு மருணைநாட் டுறையும்
பெற்றவிளந் தென்றன்மறு கிடத்தியங்குங் காலம்
பேதையேன் சிந்தைமறு கிடத்தியங்குங் காலம். (௨௧)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சாலிற் றுலங்கு நகத்தாலுங்
கையிற் பொலிகூர் நகத்தாலும்
சீலத் தாரக னுரங்கொண்டீர்
திசைமா முகனைச் சிரங்கொண்டீர்
மேலைப், புரத்தை நகைத்தெரித்தீர்
வில்வேள் புரத்தைப் பகைத்தெரித்தீ

சூலப் படையேன் மழுப்படையேன்
சுமந்தீ ரருணை யமர்ந்தீரே. (உஉ)

மாலையிரத்தல்-மடக்கு
அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அமர்ந்தரு ணைப்பதி வாழ்வீரோ
யன்பர்க ளன்பினி லாழ்வீரோ
சுமந்தொளிர் சூலமெ டுப்பீரே
தோளணி மாலைகொ டுப்பீரேல்
இமந்தரு வெண்மதி காயாதே
யிருகணை டும்புனல் பாயாதே
கமழ்ந்தகு ழற்கொடி வாடாதே
கங்குலு மிப்படி நீடாதே. (உந)

ஒன்பதின்சீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நீடாழி ஞாலம் வானொடு தீகாலு லாவுமி யாவையு
நீறுய காலமாய் விடுநாள்
கோடாழி மால்பி தாமக னாருன கோடி வீழ்தலை
கோடீர பாரமீ துறவே
சூடாத மாலை சூடுவா தோளோடு தோளை வீசுவா
சோணாச லேசர்சோ பனமா
ஆடாத வாட லாடுவர் பாடாத பாடல் பாடுவ
ராராத வோகைகூ றுவரோ. (உச)

புன்னாகங்கண்டிரங்கல் - கலித்துறை.

கூத்தாடுமருணேசர்வரையன்பர்பொருளன்புகொண்டுன்னையும்
நீத்தார்கொணிழலாருமிலையாகிநின்றாய்கெடுங்காலமே
பார்த்தாலுமயலேகிளைத்தாய்சலித்தாய்பசுந்தென்றலால்
பூத்தாய்பொன்னிறமாகவென்னாகமேயன்னபுன்னாகமே. (உரு)

இரங்கல் - மடக்கு.
அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நாகமெ டுத்தவ ரம்பானூர்
நாலும றைக்குவ ரம்பானூர்
தோகையி டத்தவர் சேணூராய்
சோணகி ரிப்பதி வாணூராய்
மாகமெ டுத்தவி ளங்காவே
மன்னவ ரெண்ணம்வி ளங்காவே
கோகன கத்திமி ருந்தேனே
கொன்கனை விட்டுமி ருந்தேனே. (உசு)

ஊசல் - மடக்கு
எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இருசரணச் சிலம்பாட வாடி ரூசல்
லிளமுலைப்பொற் சிலம்பாட வாடி ரூசல்
மருவுகலை மருங்கசைய வாடி ரூசல்
வரிவளைக்கை மருங்கசைய வாடி ரூசல்
அருமறைக ளளவிடுதற் கரிதா மைய
ரருணகிரிப் பரமர்புக ழுடைவே பாடிப்
பொருமிருகட் கயலுலவ வாடி ரூசல்
புயமதனன் கயலுலவ வாடி ரூசல் (உஎ)

பாங்கிசொல்லுதல்
எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஊசலு கைத்திடுவார் குன்றெதிர் கூவிடுவா
ரொண்டர ளங்கொளுவார் தண்டலை கொய்திடுவா
ரூசிப்பு ணற்குடைவா ரம்மனை பந்துகழங்
காடிம கிழ்ந்திடுவார் கோடிம டந்தையரோ
டீசர்வி டைக்கொடியார் பூசைசெ யற்கெளியா
ரோரரு ணைப்பதிசூழ் மேருவி னிற்கவணே

விசுதி னைப்புனமே யாவரொ னத்தெளியேம்
வேலர்ம னத்திடையே மாலைவி ளைத்தவரோ. (உஅ)

மடக்கு - கலிவிருத்தம்.

மாலையென்பாங் கலத்தாரு மறைநாறுங் கலத்தாரும்
கோலமுன்ன கலத்தாருங் குறைவில்பரி கலத்தாரும்
மாலைவில்வேள் சலத்தாரு மதர்த்தமதா சலத்தாரும்
மேலகலாச் சலத்தாரும் விளங்கருணை சலத்தாரே. (உகூ)

தலைவியைப்புகழ்தல்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணையொளி தனிலுமொளி ரருமலைம ருந்தாய
வமலர்தி ருங்கழலினர்
மருமலரா வி ரிந்துநதி பெருகருணை யம்பதியின்
மருவியம டந்தையிடையாம்
ஒருகொடியி லொன்றுகமு கொருபவள மொன்றுகுமி
ழொருமதிய மொன்றுபிறைதான்
இருசிலையி ரண்டுகணை யிருபணையி ரண்டுகுழை
யிருமுலையி ரண்டுமலையே. (௩0)

எழுதரிதென்றல்

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலையாச னத்தர்மலை மயிலாச னத்தரொழு
மலையாநி லத்து வருவார்
அலையாச னத்தரொடு மமிர்தாச னத்தர்தொழு
மருணாச லத்தர் வரையீர்
முலையானை கட்டியிடை வெளிதேர்நி றுத்திமதி
முகமாயு ழைத்தரு [illegible]

இலைவேல்ப ரப்பியினி தெழுதோள மைப்பனினி
யெழுதேனி ருப்பு மனமே. (கூ௰)

இரங்கல்-சிலேடை-கட்டளைக்கலித்துறை.

மேலாடை தோற்றணி சங்காழி கைவிட்டு மென்சிலம்பின்
காலால் வருந்தி நிலங்கீறுங் கோலத்தைக் கண்டிருந்தும்
ஆலால முண்டவ ரண்ணா மலையர்த மன்பர்க்கன்றி
மாலான வர்க்கிரங் காரிங்ஙனேயொரு வன்கண்ணரோ. (கூஉ)

நேரிசைவெண்பா.

கண்ணருக்கும் போதருக்குங் காண்பரிதாய்க் கண்பறித்த
திண்ணருக்கு நன்றாய்த் தெரிந்ததே - விண்ணருக்காப்
போற்றுவா ரண்ணார் புரமெரித்தா ரென்பிறவி
மாற்றுவா ரண்ணா மலை. (கூகூ)

இரங்கல்-கலிவிருத்தம்.

அண்ணா மலையத் தரடற் கிரிமேல்
எண்ணா மலையத் தவரொய் திலராய்
கண்ணா மலையத் தனைநீர் கலுழும்
விண்ணா மலையத் தரும்வெண் மதியே. (கூச)

பாங்கன் துணிவு.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மதுவாணி றைந்தகுழன் மடவாரொ ருங்கருணை
மலைமேன்ம ருந்தா வரையில்
முதுநீரில் வந்தவவ ரடையாள மென்றிறைவா
முதலேமொ ழிந்த படியே
இதுநாக மன்றுமுலை யிதுபூக மன்றுகள
மிதுமேக மன்ற ளகமே

அதுநீல மன்றுவிழி யதுசாப மன்றுநுத
லதுகோப மன்ற தரமே. ((ருசு))

நாரைவிடுதூது.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணை வெற்பின ரயனி ருக்கவு மரிபி ழைக்கவு மாகவே
திருமி டற்றொரு கருமை வைத்தவர் திருநிக்கய றேடியே
கருது நெட்டிட லசைவ றத்துயில் கபட நித்திரை நாரைகாள்
இருக ணித்திரை யிலையெ னச்சொல விறைவர் பக்கலி லேகுமே.

பாங்கிதலைவிக்குரைத்தல் - கட்டளைக்கலித்துறை.

ஏகா புனத்துத் தழையாற் கரிபட்ட தென்பதொன்றும்
போகாத வூர்க்கு வழிதேடு வார்புலிக் கான்முனியும்
நாகா திபருந் தொழுமரு ணாசல நாட்டிலிளந்
தோகா யணங்கனை யாயவர்க் கேதுசொ லத்தக்கதே. (ருஎ)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொர்க்கமெனு மொருபதவி யிருக்க மாலைத்
துளவணியு மரிபதவி யிருக்க மேலை
நற்கயிலை மலையிருக்க நினைத்தோர்க் கெல்லா
நயந்தமுத்தி நகரமொன்றே நல்கா நிற்பீர்
பொற்கையினு லுமைவணங்கிப் பரிந்து பூசை
புரிந்துதவந் தெரிந்துதினம் புகழ்வோர்க் கெல்லாம்
எறகுலவு புகழருணை யீச ரூரோ
யினிதளிக்கும் பதவிதனக் கென்செய் வீரோ. (ருஅ)

சித்து-எண்சீர்க்கழிநெடில ஆசிரியவிருத்தம்.

ஸ்ரீ தை யணிமழுவா ருமைபங் காளா
விளங்கருணைச் சித்தர்யாம் விளம்பக் கேளா
காரத்தை யெமக்கிடுகெஞ் சத்தை யேகோ
கனகமெனக் காட்டிடுவோங் கரியோ ருக்குத்

தாரத்தைப் பொன்னாக வமைத்தோந் தம்பீ
தாம்பரமும் பொன்னாகச் சமைத்தோ மிந்தப்
பாரத்தை யாரறிவா ரயனு கத்தைப்
பசும்பொனிற மாகவுமே பாலித் தோமே. (ங௬)

இதுவுமது

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பாதமெமக் களித்தவரு ணேச னூர்க்கின்
பச்சிலைபொன் செய்திமையோர் பசிநோய் தீர
ஓதுகடை மருந்தளித்த சித்த ரோம்யா
மொருபிடிசோ றல்லதுகூ ழுண்டோ வப்டா
மாதவாதந் திருவாணை கரிக ளெல்லா
மாதங்க மாக்குகிற்போ மருந்தில் லாதே
ஏதமற நாகமொளித் தராவாச் செய்வோ
மிரும்பையும்பொன் னாகவுனாத் திசைவிப போமே. (சo)

தலைவியைப்புகழ்தல்

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இதழி யந்தொடைய ரருணையங் கிரியி
லிரத மூந்திவிடு வலவனே
பதிய டைந்துமறு கினில்வ சந்தணதி
படையெ மூந்தது பகருவேன்
புதிய கொம்புசிலை வளையி ரண்டருகு
பொழியும் வெம்பகழி போரரு
உதய தந்தமத களிறு டன்கதலி
யுபய தண்டுவரு கின்றதே. (சக)

ஒன்பதின்சீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வனாக்கனக சாப சோணை கிரிப்புனித கால காம
மதிக்குமெடு மாயர் போலவே

தனைக்குனினி யாரியாவ ரவர்க்குமுனி லாமணீடு
தழறசிகரி யாக னீதியோ
வினைக்கமல வோடை யாவர் புரத்தைமுனி பாண மாவா
விரித்தகொடி யாவ ரீதலால்
இரக்குமனை தோறு மேறி நடத்துமெரு தாவா மேவி
யிடத்திலுறை தேவி யாவரோ. (சஉ)

கட்டளைக்கலித்துறை.

ஆனிட பக்கொடி சோணு சலனென்று மன்பர்மலா
தானிட முத்தி தரும்பெரு மானென்றுஞ் சம்புவென்றும்
கானிட வேடன்முன் னூனிட வுண்டது கண்டுமொரு
மானிட மானவ னைத்தேவர் செய்வதென் வந்தனையே. (சா)

களி - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தனையிருக்கு மறைதுதிக்கு மருணை நாதன்
சரணமலர் புகழ்களியேஞ், சக்ர பூசை
வினையிருக்கு மவர்க்கெளிதோ வரிதா னையோ
விதிவசத்தால் விவரமற்ற விதஞ்சொல் வேனே
பனையிருக்க நெடியகஞ்சா விருக்க வீணே
பச்சையா லிலைதுயின்றான் பனையன் றேனி
யனையிருக்கப் பணிதுயின்றான் மதுவாந் தெய்வ
வாழிவிட்டுப் பாற்கடன்மீ தழுந்தி னானே. (சச)

களி - நேரிசைவெண்பா.

ஆனா கொடியா ரருணை புரிக்களியேம்
வானாட ரோனை மதியற்றார் - மேனாளில்
சும்மாகஞ் சாவிலையே தூளிடித்துத் தின்றாலும்
தம்மாகஞ் சாவிலையே தான். (சரு)

பிச்சியார்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தாமணிவர் திரிசூல மெதிர்கண் டார்மேற்
சக்கரத்தை விடுவர்சிவ சமயத் தாவர்

காமுகனை யாண்டுகொளார் சிவநூல் கேட்பார்
 கருத்தினின்மா றெரிசனமே காட்டா கிற்பார்
ஆமையர வணிதொடையார் விடையார் வாழு
 மருணகிரி வளநாட்டி லகங்க டோறும்
சேமநிதி யெனவுலவும் பிச்சி யார்தந்
 திருப்பெயரை வெளியாக்கித் திரிகின் றாரே. (சசு)

இதுவுமது - மடக்குக் கட்டளைக்கலிப்பா.

தில்லை மன்றுணை டம்புரி பாதனார்
 தேவ ராயர் திருவரு ணைக்குளே
முல்லை மல்லிகை சண்பகம் பிச்சியார்
 மொய்த்த வார்குழன் மோகனப் பிச்சியார்
நல்ல மேனியும் பொற்றிரு வேடமே
 நாடி யிட்டதும் பொற்றிரு வேடமே
இல்லை யாயினு மிவ்விடை யையமே
 யேற்க வந்தது மிவ்விடை யையமே. (சஎ)

கார்கண்டு பாகனோடுசொல்லல்.

கட்டளைக்கலித்துறை.

அயங்காட்டியமறையார்விடையாளரருணைவெற்பில்
புயங்காட்டியமணித்தேர்வலவாமுன்புபோனகொண்டல்
சயங்காட்டிக்கோபமுஞ்சாபமுங்காட்டித்தடித்திடித்துப்
பயங்காட்டினலஞ்சுமேதனியேநின்றபைங்கொடியே. (சஅ)

நேரிசைவெண்பா.

பைங்கட் புலிக்குப் பரிபவத்தைக் காட்டிநர
சிங்கத் தினையடர்த்துச் சீறியே - வெங்கைப்
புழைக்குஞ் சரமுரித்துப் போர்க்கு மருணைக்கே
தழைக்குஞ் சரபமொன்று தான். (சகூ)

குறம் - பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஒன்று மூன்று நாமு ளைக்க வந்து கேளு மரிவைமீ
 ருதய மான சுளகு நெல்லு மொற்றை பட்ட தாதலால்

கன்று மானு மழுவு மாக வொருவர் வந்து தோன்றினா
கண்ட மட்டி லேக றுப்பர் கைக்க பால ரவையும்
சென்று நாடி லருணை மீது காண லாகு நாமமுந்
தேவ ராய ரவர லாது தெய்வம் வேறு கண்டிலேம்
நின்று வாடு மிவட னுசை யிடர்த விர்ப்ப ராதலா
னீறு கொண்டு மூன்றி ரேகை நெற்றி மீதி லெழுதுமே.()

இரங்கல் - இதுவுமது.

நெற்றி மீது கண்ப டைத்த வும்மை மார னெய்வனோ
நீர ணிந்த வரவி ருக்க நெடிய தென்றன் முடுகுமோ
வெற்றி யான தாளி ருக்க மதிய மும்மை நலியுமோ
விரவு கங்கு லுமது கண்கள் வெயிலின் முன்பு நிறகுமோ
கறறை யான குழலி யெந்த வுதவி கொண்டு பகைவெலும்
கருணை கூர்தெ னருணை மேவு கலியு கத்து மெய்யரோ
செற்ற லார்கள் புரமெ ரித்த புழுக ணிப்ர தாபரோ
தேவ ராய ரேசு கந்த தினவ சந்த ராயரோ. (ருக)

கார்காலம்
அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நினைப்போது தானே நினைத்தாலு மேலோா
சிறப்பான பேறீகுவோர்
வளத்தாடு சோணு சலத்தாடு நீரா
மயிற்பேடை காளோடைகாள்
வினைப்பாவி யானேன் விழிப்பாயு நீரான்
மிகுத்தேறு கார்காலமே
தனித்தாவி சோர்வார் தமக்கால மேநீள்
சரற்கால மேகாலமே. (ருஉ)

இளவேனில் - நேரிசை ஆகவற்பா

காலையு மாலையுங் கைம்மலர் குவித்து
மாலு மயனும் வணங்குதற் கரியோன்

இமைக்குழு னுலக மியாவையும் படைத்தோன்
தனக்கொரு தாயுந் தந்தையு மில்லோன்
பழவினைக் கயிற்றிற் பல்லுயிர்ப் பாவை
அழகுற நடிக்கத் திருநடம் புரிவோன்
வினைவலை யறுக்கு மெய்த்தவ வேடன்
மனவலைப் பிணிக்கு மான்மத நாதன்
பேரு மறுபத் தாறு யிரம்பொன்
மாறுத் தியாக வசந்தவி நோதன்
அண்ணா மலைய னதிருங் கழலன்
கண்ணா ரமுதன் கைலைப் பொருப்பின்
மறலித் திசையின் மலயா சலமென
இருத்திய தூருத்திகொண் டிளங்கால் பரப்பிக்
காவலைப் பல்லவக் கனலு வசைப்பக்
குறைவறு குயில்வாய்க் குறட்டினி லடக்கிப்
பொறிதிக ழரிக்கரி யதனிடைச் சொரிந்துள்
இசைத்திடு மஞ்சரிப் பசைக்கோ லசைத்து
மதவீ ரனுக்கு வசந்தக் கருமான்
பனிமலர்ச் சாயகம் பண்ணி நீட்டினன்
இன்னமும் வந்திலர் கேள்வர்
புன்னையங் கருங்குழ லன்னமென் னடையே. (ருங)

மடக்கு - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அன்னியமா சடையாரும் பின்னியமா சடையாரு
மடிமாற நடித்தாரு முடிமாற னடித்தாரும்
உன்னுமற மொழிந்தாரும் பின்னுமற மொழிந்தாரு
முகைத்திடமோ னேற்றாரு மிகைத்திடமோ னேற்றாரும்
என்னகத்தா முரியாருங் கொன்னகத்தா முரியாரு
மெருக்கிதழி மணத்தாரு முருக்கிதழி மணத்தாரும்
வன்னிவடி வனத்தாருஞ் சென்னிவடி வனத்தாரும்
வருகருணைப் பதியாரும் பெருகருணைப் பதியாரே. (ருச.)

சம்பிரதம்
எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பரவைபொ ருக்கெழுவுங் ககனம்வ டுப்படவும்
  பரிதிவ டக்கெழவு நிருதிகு ணக்குறவும்
இரவுப கற்படவும் பகலிர வொத்திடவு
  மெவரினி யற்றிடுவோ மிவைசில வித்தைகளோ
அரவம ணிப்பணியா னனலகி ரிப்பெருமா
  னருணகி ரிக்கிணையா வவனித லத்திடையே
கருதிம னத்தினிலே சிறிதுநி னைத்தளவே
  கதியைய ளித்திடுமோர் பதியுமு ணர்த்துவமே. (ருரு)

கருணைச்சிறப்பு - நேரிசைவெண்பா.

உள்ளத்தின் ஞான முயர்ந்தவிடத் தன்றியிருட்
பள்ளத்தி லென்றும் படராதே - வள்ளல்
அருணா சலப்பெருமா னம்பிகையோர் பாகன்
கருணா சலமாங் கடல். (ருசு)

பாண் - அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கங்கை வார்சடைப் பரமர்தென் னருணையிற்
  கடைதொறு நீபாட
அங்கை யாலிரு செவிபுதைத் தேத்துவோ
  மருச்சுனன் றிருநாமம்
எங்கை மார்செவி பொறுக்குநின் னிசையெனு
  மிடிக்குரன் மகிழ்வாரார்
மங்கை மார்செய லறிந்துகூறுள் பாணனே
  மயிலெனப் புகழ்வாயே. (ருஎ)

தலைவியைப்புகழ்தல்
அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

புலைடசெறிந் தளிபாடு மிதழியந் தொடைமார்பர்
  புலிபதஞ் சலிநாடுவார்

மடையிளங் கயலுவு மருணையங் கிரிமீது
மலரணங் கெனமேவுவார்
நடையுமிந் திரவேழ மிருகையிந் திரதாரு
நயனமிந் திரநீலமே
இடையுமிந் திரசால நுதலுமிந் திரசாப
மிதழுமிந் திரகோபமே. (ருஅ)

உருவெளி - கலிவிருத்தம்.

இந்திர கோபமா மிதழி பாகனூர்
செந்தமி ழருணைநந் தேருஞ் செல்லுமே
சந்திர ரேகையுஞ் சமர வாளியும்
மந்தர மேருவும் வளைந்து கொண்டவே. (ருகூ)

தலைவியைவியத்தல்
எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கொண்டலணி கண்டர்பிறை கங்கையணி செஞ்சடையர்
கொட்டமொரு பங்கி லுறைவார்
அண்டபகி ரண்டமள வங்கியென நின்றவதி
ருங்கழலர் தங்க ருணையீர்
கண்டுளது கொண்டன்மிசை திங்களெழு கின்றதிது
கண்டதிலை யுங்கண் முகமா
மண்டலமெ னும்புதிய திங்கண்மிசை கொந்தளக
மஞ்சுகுடி கொண்ட வடைவே. (சுO)

நேரிசைவெண்பா.

அடுத்துமதிச் சென்னியின்மே லம்பிருக்கு மற்றோ
இடத்திலே நாரி யிருக்கும் - தடக்கையிலே
ஏந்துசிலை விட்டிருக்கு மெம்மருணை நாதனூர்
போந்து புரமெரித்த போது. (சுக)

கார்காலம் - கலித்துறை.

போதற்குமரிதானவருணைசலத்தீசர்பொன்மேருவாய்
ஏதப்படும்பாவிமனமேபிரிந்தாரிதெவ்வூர்கொலோ

ஓதத்தினீரோடுகனலுண்டுபுயன்மீளவுமிழ்தன்மைபோல்
காதற்குண்மடவார்மெய்பொன்பூசுமின்வீசுகார்காலமே. (சுஉ)

தலைவியைவேண்டல் - கொச்சகக்கலிப்பா.

கார்வந்தா லன்னகறைக் கண்டனூர் செங்கதிரோன்
தேர்வந்தா லும்பொழில்சூழ் தென்னருணை நன்னாட்டில்
ஆர்வந்தா லுந்தணியா தன்னமன் னீரானாலும்
நீர்வந்தா லாசை நெருப்பவியுங் காணுமே. (சுங)

பனிக்காலம் - கலித்துறை.

கானம்பரந்தோலினுடையாளரருணேசர்கைலாசமேல்
தூனங்கணிகர்தோளருறைகின்றநகருடுசொரியாதரோ
பூணங்கைவளைசிந்தமடவார்மனத்தேறுபுகைபோலவேள்
டானங்களுதிர்கின்றதுகள்போலவுறைகால்பனிக்காலமே. ()

நேரிசைவெண்பா.

டண்ணிறந்த வாசவரிற் பல்கோடி மாண்டாலும்
எண்ணிறந்த வேத ரிறந்தாலும் - கண்ணற்
கமைத்தவொ மாண்டாலு மண்ணு மலையாக்
கிமைப்பளவுங் கால மிலை. (சுரு)

தலைவனைவேண்டல்
ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இலகொளி பரந்து மாரன் விடுகணை துரந்து நாடி
யிடுமிரு நெடுங்கண் மாதரார்
இலகரிய கொங்கை மீது பழுநமுவி வந்து பாலின்
விழுவதென வந்து சேர்கிலீர்
மலகரி குறிஞ்சி தேசி வைரவி சுரும்பு பாடும்
வயலருணை மங்கை பாகரோ
பசுமலர் கதம்ப தூளி மிருகமத சுகந்தம் வீசும்
பரிமள வசந்த ராசரோ. (சுசு)

மதங்கு.

ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வசிகரம் வயங்கு நீறு மபிநய புசங்க ராச
வலயமு மணிந்த தோளினர்
அசலகுல மங்கை பாகர் பரிமள வசந்த ராச
ரருணையின் வளங்கள் பாடியே
இசைபெற வரங்கி னூடு பவுரிகொண் மதங்கி யார்த
மிலகிவளர் கொங்கை யானையே
திசைபெற விருந்த யானை பிறகிட முனிந்து போர்செய்
திறலிப மனந்த மானவே. (சுஎ)

இதுவுமது - மடக்குக்கட்டளைக்கலிப்பா.

நதியைச் சூடதி ருங்கழ ளுதனர்
நம்ப னாரரு ணைபுரி வீதிமேல்
சதியிற் பாடிந டிக்கும தங்கியார்
தந்த வாசைத ரிக்கும தங்கியார்
வதனத் தாற்சசி மண்டல மாறுமே
வந்தி ருந்தவிம் மண்டல மாறுமே
கதியிற் கொண்டது மந்தக் கரணமே
கண்ட பேர்க்கிலை யந்தக் கரணமே. (சுஅ)

குறம் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணமணி மூலைக்கிரிமேற் செங்கை வைத்தா
யாகையா லருணகிரி யன்பன் மூதூர்
வருணமூலை கன்னரப் பார்த்தா யுன்றன்
மகிழ்நனுங்கன் னூரமுதன் வந்து கேளாய்
தரணியிலுன் றனைச்சேர்வன் முருகன் போலத்
தநயனையும் பெறுவையிவை தப்பு மாயின்
திருநிறைவண் டார்குழலாய் குறமும் பாடேன்
சிறந்தகுறக் கூடையும்யான் றீண்டி லேனே. (சுகூ)

மறம் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தீண்டரிய மடற்பனையின் சருகை வாரிச்
சிற்றிரும்பாற் சுற்றிவரச் செருக்கிக் கூட்டி
நீண்டதுவுஞ் சுருண்டதுமா வளைந்து சுற்றி
நிருபமெனக் கொடுத்தெதிரே நிற்குந் தூதா
தாண்டவமா டும்பரனா ரருணை நாட்டிற்
றருமறப்பெண் டனைவேண்டிச் சமரிற் போந்து
மாண்டவரோ டியகோணல் வளைக ளுங்கள்
வருங்கல்வழி வாயினடு மரங்க டாமே. (எ0)

மடக்குக் கலிவிருத்தம்.

மறைக்கவனப்பரியாரும்வளைக்கவனப்பரியாரும்
எறித்தவிரும்பிறையாருமெவரும்விரும்பிறையாரும்
பொறுத்தசினவிடையாரும்பொருந்துசினவிடையாரும்
அறத்தவளம்பதியாருமருணைவளம்பதியாரோ. (எக)

கலித்துறை.

ஆரணி துங்க ணாரணி பங்க னருணேசன்
தாரணி யஞ்சுங் காரண நஞ்சந் தரியானேல்
வாரண ரெங்கே சாரண ரெங்கே மலர்மேவும்
பூரண ரெங்கே நாரண ரெங்கே போவாரோ. (எஉ)

தழை - கட்டளைக்கலிப்பா.

போந்த போதக நல்லுரி யாடையார்
போர்வை யாளர் புகழரு ணைக்குளே
ஏந்த சூத நறுந்தழை யையனே
யெங்கண் மாத ரெடுத்து மகிழ்ச்சியாய்
மோந்த போது துவண்டது மெய்யிலே
மொய்த்த போது புலர்ந்தது கண்ணினீர்.
பாய்ந்த போது நனைந்தது மீளவும்
பார்த்த போது பசந்து மலர்ந்ததே. (எங)

இரங்கல் மடக்கு
எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலரிதழித்தொடைபான் மதியணி வித்தகனா
மலைமக ளற்புதனார் வயலரு ணைப்பதிசூழ்
குலவுமி டக்கழியே பலவுமி டக்கழியே
குறவையி னக்கயலே யுறவுமெ னக்கயலே
சலமிகு முற்பலமே தளர்வது முற்பலமே
சருவும னத்திடரோ தழுவும னத்திடரோ
இலைநெறி சற்பனையே யிவருளா சற்பனையே
யினியப னித்திரையே யினியிலை நித்திரையே. (எச)

சுவடுகண்டிரங்கல்
எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நித்த னம்பனரு ணைச லத்திருவை
நின்று தேடியுழ ரெஞ்சமே
இத்த டஞ்சுரம டங்க வோவிதல
தில்லை வேறுமா மிதனிடை
அத்தி நின்றவிட மவ்வி டஞ்சிலைகொ
ளரசு நின்றவிட மூவ்விடம்
எய்ப்பு ளஞ்சியிள வஞ்சி நின்றவிட
மிவ்வி டஞ்சுவடு மேவுமே. (எரு)

மடல்விலக்கு - கலிவிருத்தம்.

ஏறுடை யண்ணலா ரேழை பாகனார்
ஆறணி சென்னியா ரருணை வெற்பரோ
கூறொரு பெண்ணையே கூட வேண்டுவார்
வேறொரு பெண்ணையே வெட்டு வார்கொலோ. (எசா)

தவம் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஐந்தழல மருந்தருந்தி யரிய யோக
வகைபுரிந்து வாயுவுள்ளே யடக்கினாலும்

காய்ந்தவிருப் பூசியிலே தவஞ்செய் தாலுங்
காயம்வருந் திடுவதல்லாம் கதிவே றுண்டோ
ஆய்ந்ததிரு நீறணிந்தைந் தெழுத்தை யோதி
யகமகிழ்ந்து சிவாகமத்தி னடைவை யோர்ந்தே
ஏய்ந்தருணை சலத்தைவலங் கொண்டா ரன்றோ
விமைக்குமுன்னே கைலைமலை யிடங்கொண் டாரே. (எஎ)

மாலையிரத்தல்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இலங்கியதிங்களெழுந்தாலெங்கண்மின்வெங்கதிரொன்பாள்
கலங்கினளாயினுமன்னுள்கட்கமலங்குவியாவோ
துலங்கியவெங்கதிர்தானேசோணகிரிப்பெருமானே
அலங்கலையென்றுகொடுப்பாயன்றதுவெண்மதியாமே. (எஅ)

நேரிசைவெண்பா.

ஆற்றுங்காற் கஞ்சத் தவர்தா மரைக்கண்ணர்
சாறறுங்காற் கண்ணரவர் தந்தையார் - கீற்றுமதி
சூடும் பெருமானைச் சோண கிரி வித்தகனைத்
தேடுவதிங் கெப்படியோ சேர்ந்து. (எகூ)

கட்டளைக்கலித்துறை.

சேணா திருவுடைச்செல்வனைக்காணிற்சிறப்புச்செய்து
பேணாதவருமுண்டோபுவிமீதிற்பெருத்தெழுந்து
சோணாசலவடிவாய்வெளியாய்நின்றசோதிதனைக்
காணாதகண்ணனைச்சொல்வாசெந்தாமரைக்கண்ணனென்றே. ()

தவம் - நேரிசைவெண்பா.

என்றுமதிக் கண்ணு ரிறைவரரு ணைபுரியில்
நின்றுதவம் புரியாய் நெஞ்சமே - பொன்றிரளான்
மாதனையா னுயிழைசூழ் மாதனையா னீதுவண்டு
மாதனையா னுமையென் சொல்வாய். (அக)

இடைச்சியார்
எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொல்லாடி னுமக்கிரண்டு பசுவே யுண்டு
சுமந்திடுபாற் கலசமுமத் துணையா மீதும்
அல்லாம லிடையின்மிக விளைத்துப் போனீ
ராயிருந்து மிடைமதியோ வகந்தை தானோ
புல்லாமென் பணிதொடையா ரருணை நாட்டிற்
பொதுவர்குல மங்கையரோ புவிமேற் கண்டோம்
எல்லாருந் தனித்தனியே யெடுத்தக் காலு
மிரண்டுமுறை யாமலகன் றேகுவீரோ. (அஉ)

இதுவுமது-கட்டளைக்கலித்துறை.

வீரனை நல்கி மகமூறு செய்த விடைக்கொடியார்
காரணி கண்ட ரருண சலத்திற் கலசங்கொண்டு
மோரது கூறு மிடையின மாதுவக்கு முண்டகம்போல்
ஈரடி மெல்லினம் வல்லின மாகு மிருதனமே. (அ௩)

தலைவி யிளமை புணர்த்தல்
அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தடனுக மணிவெயிலும் பிறையுமிழு நிலவுமெதி
சடில நாதன்
அடனுக நெடுஞ்சிலையா னசுரர்புர மெரித்தபிரா
னருணை நாட்டில்
திடனுக மனையவரோ தனஞ்சிறிதுங் காணாத
சிறியார் தம்மைக்
கடனுக நீர்வினவிப் பிணைதேடி முறிதழையேன்
கைக்கொண் டீரோ. (அச)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கையடைந்த மழுமானுஞ் செழுமானு முழைமானுங்
கயலு மானும்

மையடைந்த விழிமானு முடனாக வருணேசா
வருகு வாரோ
மெய்யடைந்த நிறங்கருகி விழிகளும்பஞ் சடைந்துவர
மிடற்றி னூடே
ஐயடைந்து படாந்துவர யமனடர்ந்து தொடாந்துவரு
மன்று தானே. (அரு)

தலைவன்சொல்லல்-நேரிசைவெண்பா.

அண்ணு மலையா ரருணையனை யீரும்மைக்
கண்ணாலஞ் செய்தான் கமலத்தோன் - எண்ணு
திணைக்கோலஞ் செய்தமுலை யேந்திழையீ ரென்னை
மணக்கோலஞ் செய்தான் மதன். (அசு)

கொற்றியார்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மழலைமொழி யிசையாலுங் கொடும்பார்வை யதனாலு
மயக்க மாகிச்
சுழலும்விட ரரவமெலாம் படமெடுத்து முன்னாடத்
தோன்றி னீரோ
அழலுருவ மணிமரத்த ரருணகிரி வளநாட்டி
லளிவாந் தாதும்
குழலொருசற் றுலன்டாயி னெப்படியோ வாட்டிடுவீர்
கொற்றியாரோ. (அஎ)

இதுவுமது - கொச்சகக்கலிப்பா.

ஆரிதழி சூடு மருணேசர் நன்னாட்டில்
வாரிறுகு கொங்கை மலைசுமக்குங் கொற்றீரோ
பேரிருள்போய் நாமப் பிறைநிலவு கண்டொளிக்கக்
கூரியகண் ணில்லார் குழல்குறைந்தா ரென்பாரோ. (அஅ)

வஞ்சித்துறை.

பாணுர் மொழிநிறை,
சோணு சலரடி

பேணு தவனூறு
மாணு நரகமே. (௪

வஞ்சி விருத்தம்.

நரக வாதையில் வன்பிறார்
தரணி மீதொரு கொன்பெறார்
சுரரு லோகமு மின்புறார்
அருணை நாயக ரன்பறார். (௫

வேற்றொலி வெண்டுறை.

அருணையதிருங்கழலராறணிசெஞ்சடையாளரரிவைபாகர்
கருணைநெடுங்கடலானபெருமானூர்தாடொழுதார்கதியைநாடி
மரணமிலாவிமையவர்தம்வானுலகமன்றே [ங்
பொருணிறையுநான்மறையோர்புகலுமத்தாட்பூவே. (௬

இரங்கல் - கலித்துறை.

பூவுண்டவிடையாளரருணைசு த்தீசர்பொன்மேருவாய்
பாவுண்டபுகழாளர்பிரியேனெனச்சொன்னபருவத்திலே
காவுண்டுகுயிலுண்டுமயிலுண்டுகிளியுண்டுகனிதாவுதே
மாவுண்டுகுருகுண்டுதிருகுண்டமனனுண்டுமறவாமலே. (௰௨

வெறிவிலக்கு-கலிவிருத்தம்.

வாங்குவில் லேர்நுதல் வயங்கு மாதரீர்
ஈங்கிவ ளொருவர்கை யேட்டை வாங்கிறல்
ஆங்கடு வணிந்தவ ரருணை நாட்டிலே
நீங்கண்மை யழிப்பது நீதி யல்லவே. (௰௩)

தலைவியைப்புகழ்தல்-கட்டளைக்கலித்துறை.

அள்ளற்கடல்விடநீங்காதகண்டரருணைவெற்பிற்
பிள்ளைப்பிறையுஞ்சிலையுமொப்பாநுதற்பேதைநல்லாள்
வள்ளற்குழைபொருகண்ணுக்குத்தோற்றம்பும்வாரிதியுங்
கள்ளக்கயலுமிராசியின்மீனுங்கடைப்பட்டதே. (௰௪)

வலைச்சியார்
அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தேவியிட மகலாத வருணகிரி வளநாட்டிற்
றெருக்க டோறும்
மாவிரத முனிவரொலா மயல்கூரக் கயல்கூறும்
வலைச்சி யாரே
சாவிதிகழ் வாவியிலே மீன்பிடித்து வருவோரைக்
கண்டோங் கண்டோர்
ஆவியெலாம் பிடித்திழுக்கு முமைப்போல வொருவரைக்கண்
டறிந்தி லோமே. (௩௫)

வலைச்சியார்-நேரிசைவெண்பா.

மேலா றணிசடையா ரண்ணா வீதியிலே
மாலாக வந்த வலைச்சியரோ - காலா
லிருவரா லுங்காட்டும் யான்பிடிக்கக் காதல்
ஒருவரா லுந்தீரு மோ. (௩௬)

செவிலி நற்றாயைத்தேற்றல்
எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஒருவ ராலுமணு காத நாளிலே
வுயிரி னனைவொரு கேள்வ னாசையால்
மருவி னாலுமென தாகு நாளையே
வழிக டோறுமினி நாடி மீளவே
கருணை நீதிமனை பேணு மாதுடன்
கடல்க ளேழுமலை யேழு மேழுமா
வருணா சூழுமுல கேழு மேழுமா
வருணை நாதாசர பாவ தாரமே. (௩௭)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தாரிலங்கு மறைமுடிவி னடித்தருளு மருணேசா
தமது நாட்டில்

நாரியர்மேன் மனமகிழு மளியினங்கா ளொருவார்த்தை
நவிலக் கேளீர்
ஏரிருக்குங் கைதையெலாஞ் சோறிருக்க நீரிருக்கு
மிடங்க டோறும்
வேரிமலாத் தேனிருக்க விவர்கூழை விரும்பிவந்தேன்
விழுகின் றீரோ. (௯௮)

தலைவியவயவ வருமைசொல்லல்
அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஏமநெடுஞ் சிலைவளைத்த பெருமானா ரருணகிரி
யிறைவர் நாட்டிற்
றூமணிமன் டபத்துறையு மடநதையிடை யெழுதவென்
றுற் றலைவ ரோ
மாமுயற்கொம் பினிலேறி விசும்பலரைப் பறித்துமுனம்
வடிவி லாதோன்
ஆமைமயிர்க் கயிறுகொடு தொடுத்தணிந்த புதுமையினு
மருமை யாமே. (௯௯)

தலைவிகையுறை யேற்றமைசொல்லல்
கட்டளைக்கலிப்பா.

ஆரவ லாக்கழி யாவர நல்குவா
ரத்த னாரரு ணாபுரி வெற்பரோ
பாரவி யப்புற நீர்தரு மாமணி
பட்ட பாடு பகர்ந்திட லாகுமோ
காருழ் றற்குமு டிமணி யாயிரு
கண்கண் மீதுறு கண்மணி யாய்முலை
சேர்த லுற்றபொ ழுதிரு குன்றிலுஞ்
சென்று லாவுந் தினமணி யானதே. (௧00

திருவருணைக்கலம்பகம்

உ

கணபதி துணை.

ஆரணி ஜாகிர

தண்டு குண்ணத்தூர்

ஸ்ரீ ஆஞ்சநேயர்

பதிகம்.



இது

மேற்படியூர் அன்பர்கள் விரும்பியபடி

காயக்கூர் செந்தமிழ்ப் போதகாசிரியர்

மு. சுந்தர முதலியார்

இயற்றி

ஆரணி

வித்தியா ரத்நாகர வச்சுக்கூடத்தில்

அச்சிற்பதிப்பித்தது.



இரௌத்திரி ௵ தை ௴



உ

சிறப்புப்பாயிரம்.

ஆரணி ஜாகீர் போர்டு ஹைஸ்கூல்
முதல் உதவி உபாத்தியாயர்
ஸ்ரீமத் M. S. மீனாக்ஷிசுந்தரமையர், B.A., L. T.,
அவர்கள் இயற்றிய

வெண்பாக்கள்.

சீராருந தண்டுண்ணைத்தூர்மலைமேற் சேர்ந்திலங்குஞ்
சீராம தூதன் திருப்புகழால் — ஊடராரின்
உள்ளங் குளிர்விப்பான் ஒண்பதிகம் பாடினனை
வள்ளலெஞ் சுந்தரப் பேர் மன்.

நாமக்கூா சுந்தரப்பேர் வள்ளல் கவிராசன்
ஆமக்கூா ஞான அநுமந்தன் — ராமற்கோர்
தூதன் புகழ்விரிதமேதா அப்பதிகம் தான்புனைந்தான்
தூதன் பதஞ்சேர் தவன்.

உ

கணபதி துணை

ஸ்ரீ ஆஞ்சனேயர் பதிகம்.

காப்பு வெண்பா.

நண்டுகுன்னைத் தார்மலைமேற் றங்குமா ரமான்மீது
கண்டுநிகாநறபதிகங் கட்டுரைக்க — விண்டுபுகழ்
செஞ்சடைச்சராஞ்சுமுகன் சேயனருளாஞ்சுபுகலா
செஞ்சரணைக்கஞ்சமலா செப்பு.

ஆசிரிய விருத்தம்.

இந்துவின்படையினால் சூரியன்படையினால்
எழிலாமெரிப்படையினால்
ஈசுரன்படையினால் வாயுவின்படையினால
ஏற்றகருடன்படையினால்
ஈத்ரிப்படையினா லிந்திரன்படையினால்
ஈமனாரவிடும் படையினால்
ஞானம்வள்படையினால் வருணமாப்படையினால்
நன்மதன்படைகள்முதலா

எந்தவிதப் படைகளாலுங் கலங்காத நின்னை
இணையற்ற திருமேனிமேல
திருமுகன் விட்ட படையாறுகளிச் சுவைக
எளியேனை யாண்டருளுவாய
தந்தாவளங்கள் பல நந்தாதுவளையாகு
துண்டலகமேளாங்கிலவருந
தணிகுன்றத்தாரில் விண்டுவினமுடிமேற
றழுகனுமறுமந்தத்தேவே

பழுவெகாளிமிகுந்திட்ட மணிமகரகுண்டலம
பளபளபளவாகவாட
பாங்குபொற்றிலகுமமரை மணியாடமரைமலரப
பதுபுரங்களா
அழகுமணிகொண்ட புதிய பதக்கமோராவல
யரியதோளிலாட
அந்தமிகுகொவ்வைப் பழத்தைநிகாதிருவாய்
லருளுநகைகிலவுமாட
மதாமுகிலைறகந்தார தனிலமணிவடமாட
தொந்திதோமெனாடிட
தொல்லரக்கர் வயிறறெரிமிகுந்தாடிடத்
தாண்டியமகாறுபாவா
தழுலமணிகொண்டமுகக்கண் கொண்டவீரனே
தமியேனையாண்டருளுவாய்
தணிகுன்றத்தாரில் விண்டுவினமுடிமேற
றழுகனுமறுமந்தத்தேவே

வடதிசைக் கோலமுகமுங் கிழக்குத்திக்கு
மந்திமுகமுந்தெற்கினில்

வானரநரசிங்கமுகமுங் கூடக்குதிளிசை
வளர்கருடமுகமடைந்தே
அடல்சேருமுசசியிற் குதிரைமுகமுங்கொண்
டறைந்தவதனங்கடோறும்
அழகுவிழிமூன் றுவித மைந்துமுகமும்பத்தோ
டைந்துவிழிகளையுங்கொடு
நடமாடுகினதடியையன் பொடாறுகாலமும்
நவிலுமெய்ஞ்ஞானியர்க்கு
ஞானமுந்திருவருளு முதவுபரமாத்மனே
நாயேனையாணடருளுவாய்
தடமாகமஞ்சள்கன்னல்வாழைதெங்குடன்
றணைகமுகுபலவோங்கிடுந்
தண்டுலணைத்தாரில்விண்டுவின்முடிமேற்
றழைகுமநுமந்ததேவே

ஒருசக்கரத்தையுங் குதிரையேழையுமந்து
ஊனபாதத்தவனையும்
உடையதேருனதுபாரம்பொறுக்காமையை
யுணர்ந்துவடமேருசிகரத்
தொருதாளுமற்றந்ததேரின் மிசையொருதாளு
மூன்றிசூரியனிடத்தி
லொப்பற்றநவவியாகரணமுழுதுங்கற்ற
வுத்தியில்மிகுந்தமணியே
திருவுற்றராமனுக்கடிமைசெயவஞ்சனு
தேவிமகனுதித்த
தேவனேநின்னடிக்கடிமைசெயவடியனைச்
சேர்த்தாள்வதெ[illegible]

தரூமீதூகிளிமுதலகற்றூநலமுறசிதக்
தமிழ்வேதவொலியெழுமபும
தண்டுகுண்ணததூரிலவிண்டுவின்முடிமேற்
றழைக்குமநுமந்ததேவே.

அரக்கனெனதன்னையாஞசீதையையெடுத்துவரீ
யலையிட்டிருக்கிறானோ
அன்றியோர்மலையிட்டிருககிறானோ தேவ
ரகமிட்டிருக்கிறானோ
துரையிசெலவிடமிட்டிருக்கிறானோவென்று
சஞசலங்கொண்டுவாடுஞ
சமயத்திலெதிரிட்டபொங்கரிற்றுன்பமாஞ
சாகரத்துள்ளழுந்தும
மரையொத்தகணணன்மணிவண்ணனருமனைவியா
மாதரசியடிவணங்கி
வரமிட்டமோதிரந்தனையிட்டதூதனே
மைந்தனுக்கருளசெய்குவாய்
தாமுற்றவானைமீனெருமையின்பாலுண்டு
தாவுதண்பனைகள்சூழ்ந்த
தண்டுகுண்ணத்தூரில்விண்டுவின்முடிமேற்
றழைக்குமநுமந்ததேவே.

பகையாமிலங்கையிலகபபட்டுமிருபாடு
படுமன்னைதன்னுயிரையும

பாவையவள்சென்றவழிபார்த்துப்புலம்புமொரு
பரமராமன்னுயிரையும்
இகவாமலுணவையுந்தூக்கத்தையுந்தள்ளு
மிளையபெருமாளுயிரையும்
இராகவன்கழலன்றிவேறுதுணையேயில்லை
எனுமவிபீஷணனுயிரையும்
தொகையேழுபத்துவெள்ளஞ்சேனையுயிரையும்
தூயபரதன்னுயிரையும்
தொல்லுலகுபல்வகைப்பட்டபல்லுயிரையுஞ்
சுகமுறக்காத்ததிரா
தகையாகஇவ்வேளைகதியற்றுவாட்டமுறு
தமியனைககாததருளுவாய்
தண்டுகுணைணததுரிலவிணடுவின்முடிமேற்
றழைக்குமநுமந்ததேவே. (6)

மலையவருகின்றபலபரியைப்புடைததொழுகு
மதகரிகளைப்புடைத்து
மாயஞ்செய்யவுணர்களைமாளபபுடைத்துமிக
வருசேனையதிபரையெலாம்
ஆனையப்புடைதது முனைவாளைபபுடைத்துவரு
மடியையபபுடைத்துவிரவார்
அம்புசிலைதலைமுதல சகலமுந்தவிடுபொடி
யாய்பறக்கப்புடைத்துத்
தொலையாதவிஜயகம்பத்தின்மேலேறியிரு
தோளைப்புடைத்தநாளுக்

தோலாதகோலாகலம் பெற்றசிங்கமே
கொண்டனைக்காததருளுவாய்
தலையகன்றிட்டபூயபொய்கைசேர்சோலைவான்
றாவுநலவளமிகுநத
தண்டெருணைததூரில்விணடுவினமுடிமேற
றழைக்குமருமநததேவே (7)

ஏரெலாங்கொண்டொளிருதேரெலாமனல்சிறிது
மேங்காவரககாமேவு
யிடமெலாமனலபெரியதடமெலாமனல்யாரு
மேகுமவழியெலலாமனல
காரெலாமனல்பருகு நீரெலாமனலபடைக
கடலெலலாமனலமாதாகள
கலையெலாமனலவாகள தலையெலாமனல்நீண்ட
காடுமேடெலலாமனல
சீரெலாஙகொணடவைமேதகியுறைதருவொழிய
திண்ணசோகத்தருவெலாம
செடியெலாமடியெலாமுடியெலாமவேரெலாம்
தேவர்வாழ்கோயிலாகுஞ்
சாரெலாமனலிட்டுவெற்றிபெறுசிங்கமே
தமியேனையாண்டருளுவாய்
தண்டெருண்ணைத்தூரில்விண்டுவின்முடிமேற்
றழைக்குமருமந்ததேவே (8)

வாளினாற்பலபேரைதோளினாற்பலபேரை
வாயினாறபலபேர்களை
மல்லினாறபலபேரைகலலினாறபலபேரை
மார்பினாறபலபேர்களை
காலினாறபலபேரைகையினாறபலபேரை
கதியினாறபலபேர்களை
கதையினாறபலபேரையுதையினாற்பலபேரை
கடலபோலவருபடையெலாம
கோலிழுழுதுஙகொன்றுகளமெலாமலகைநரி
கூததாடவிநதாஜிதநுட்
குலையசெஙகுருதியாறோடராவணனிடங்
குறுநகைசெருககொடுபோய்த்
தாலமேலவாலினாலாசனஞசெய்ததிற்
றங்கியமகாதீரனே
தண்டுணைததாரிலவிண்டுவின்முடிமேற
றமையுககுமனுமநததேவே (9)

பண்ணுமறிதுயில்விட்டயோத்தியிற்றயரதன்
பாலனாகப்பிறந்து
பாவைதாடகைகொன்றுமுனிமகமுடித்துமுனி
பததினிக்கருள்புரிந்து
என்னுசீதையைமணஞ்செய்துமழுராமனை
யிகல்வென்றுசிற்றன்னைசொல்

இகவாதவனைமேகிவருமானையெய்துதன்
னெழில்மானைவிட்டுநீங்கி
அன்னானுறுபசேனையொடுகடல்தாண்டிலங்கையை
யடைந்துபோர்செய்தபெருமான்
அன்புசெய்துதனைவாயுமகனையிந்த
அடியனைக்காத்தருளுவாய்
தண்ணீர்திரம்பிசுகைமுகதலியெனவுங்கதலி
தாழையெனவுஞ்செழிக்குந்
தண்டுளுன்னாத்தூரில்விண்டுவிளைமுடிமேற்
றழைக்குமதுமந்ததேவே (10)

முற்றிற்று.

உ

சிவமயம்



திருத்தணிகை

ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேத

ஸ்ரீ செங்கல்வராயப்பெருமான்

திருப்பதிகம்.



[illegible]

[illegible]

[illegible]

திரு [illegible] அவர்கள்

[illegible]



[illegible] அச்சுக்கூடம்

41 [illegible] சென்னை.

1912.

புலவர் கருத்துரை.

சென்னை-சித்தாந்தப் பிரகாச சபைத்தலைவர்

வித்வான் திருவாளர் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்

எழுதிய வசனம்

கெழுதகை நண்பர் புராணிகர் திரு. ரா. கோவிந்தசாமி நாயுடு அவர்களாலியற்றப்பெற்ற திருத்தணிகைச் செங்கல்வராயர் பதிகத்தைக் கண்ணுற்றேன். அஃது எல்லோர்க்கும் பொருளெளிதின் விளங்கக்கூடிய இயற்சொற்களாலே யாக்கப்பெற்று இடையிடையே முன்னோர் மொழிபொருள் பல விரவி நிற்க, ஆசிரியரின் அன்புநிறைந்த மனநிலையை விளக்கும் வகையால் அமைந்திலங்குகின்றது. 'செந்தமிழின் வைதாரையு மங்கு வாழவைப்போ'னாகிய செவ்வேள், நண்பர் அவர்கள் கருத்தினை நிறைவேற்றுவிப்பானாகவென அவனது திருவடித்தாமரைகளை வழுத்துகின்றேன்.

சென்னை யங்மென் பிரஸ் அதிபரும், 'நடராஜர் விண்ணப்பப் பாமாலை' 'சிவகாமி அம்பாள் பாமாலை' 'சிவகாமி அம்பாள் துதி' 'பலதேவா தோத்திரக்கீர்த்தனை' என்னும் இப்பிரபந்தங்களின் ஆசிரியரும், அருந்தவ நெறியொழுகும் அறிஞரும், அடியேனுடைய அகத்திற்கினியாத ஆவலருமாகிய புராணிகர் திருமிகு இரா. கோவிந்தசாமி நாயுடவர்கள் இயற்றிய திருத்தணிகைச் செங்கல்வராயர் பதிகம் அவருக்கேயன்றி உளமுவந்தோதுநருக்கெல்லாம் உவகையின்பம் ஒருங்களிக்க வல்லதென்பதொரு தலையேயாம்.

இங்ஙனம் :

புராணிகர் காளத்தி இ. சிதம்பரசாமி பாண்டியர்.

உ

சிவமயம்.

திருத்தணிகை
ஸ்ரீ வள்ளிதேவசேனா சமேத
ஸ்ரீ செங்கல்வராயப்பெருமான் திருப்பதிகம்

காப்பு—வெண்பா

சீரார் திருத்தணிகைச் செங்கல்வ ராயன்மேல்
நேரார் பதிகம் நிகழ்த்திடவே—ஏரார்
கரிமுகவெகொள் தேவே கடையேன் றனக்குப்
பரிவுதமிழ்ச் சொல்லீவாய் பார்த்து.

நூல்.

பதினான்குசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

1. சீர்கொண்ட முருகாநின் திருமுகமும் திருவிழியும்
திருவாயின் திவ்ய நகையும்
திருமார்பும் திகழ்திருமுப் புரிநூலும் திருவயிறும்
திருவுசுப்பும் திருச்சேவடியும்
ஏர்கொண்ட எழிற்றுகிலும் எழிற்பூணும் இணையில்லா
எழிலடியும் எழிலார் வேலும்
எழிற்கோழிக் கொடியுமெழில் மணிமயிலும் கண்டு
இருவினைகள் இரிப்பதென்றோ [னென்
நேர்கொண்ட சிவபெருமான் நுதற்கண்ணில் வந்தமரா
நீடும்துன் பொழித்த வள்ளால்
நினைந்துருகும் அடியவர்கட் கணிமயில்மேல் ஏறிவந்து
நீடருளைத் தந்தாள் வோனே
போர்கொண்ட சூரனுடல் பிளந்தமரர் துயரொழித்த
புகழோனே பொற்பு மிக்க
புண்ணியனே வரைகிழித்த திண்ணியனே எழில்வளரும்
பொழிற்றணிகைத் தேவ தேவே.

2. எண்ணரிய பிறவிதொறும் செய்துவந்த புண்ணியத்தால்
இம்மனிதப் பிறப்பெடுத்தும்
இச்சகத்தின் வாழ்வினைமெய் யெனநாடியேன் நம்பியுனை
எண்ணுமல் இனையும் மோசசில
எண்ணறுங்காண் ஞுச்செயலை யண்ணணியெண்ணி
எய்துகின்ற இடர்களுக் கெல்லை யில்லை
எத்தனைதான் புரிந்தும் நின்சயமின் எழிற்புகழ்
எடுத்துரைக்க வாய் ருளவாய்
விண்ணவர்கள் பண்ணவர்கள் மண்ணவர்கள் வியந்தேத்தும்
வித்தகனே விமலக் கோனே
மெய்யனைய்யனே தூய்மையனே மெய்ஞ்ஞானனே த
தற்பரனே வியக்கத்தக்க செய்தானே மேவோனே
எண்ணரிய பலகோடி அண்டங்களை [illegible]
இனிதுணர்த்த இறைவனே
இச்சாஞானக்ரியா சத்திகளின் வடிவானே
எழிற்றணிகைத் தேவ தேவே

3. மெய்யெனும் பொய்யுடைய நிலமெனும் [illegible]
மேலோர்கள் வெறுக்கும் [illegible]
மின்னாசைப் பொன்னாசை மண்ணாசை மயலுறு [illegible]
ய்பூத்தலைந்து தாரணி தன்னிலே
உய்யுதற்குச் செய்நெறியை உணராமல் துய்க்க [illegible]
உழுத்தனனாம் நேவா துனரான
உண்மையுருக் காட்டியருள் மேலோட்டியுய்ய நெறிசாரதி
ஒப்பிலருள் செய்வாய் தேவாய்
செய்யவயில் தாங்கிய்ளொ தேசிகனே சின்மயனே
திண்மையனே திகழும் தேனே
சிவஞான முனிவர்களுக் கருள்புரியும் திரிபுரார்
திருமகனே தேவ குருவாய
வெய்யவனும் சூரனைவென் றருள்ந்த வேலவனே
மேலவனே சுரரும் வணங்கும்
வியனுலகோர் விரிஞ்சனரி முதலானோர் வியந்தேத்த
விழைதணிகைத் தேவ தேவே.

4. மடியாத மனமென்னும் இருள்செறிந்த
பிறவிப் பெருவனந்தனனில் காமமெனும்
மழைதன்னில் நனைந்துபொல்லா மாயையென்று
செப்புகின்ற வழியாக மருண்டு செல்கால்
படியாவைம் புலவேடர் கைதன்னில் நான்சிக்கிப்
பகரறிவாம் பெருந்தனத்தைப்
பறிகொடுத்துக் கலங்குமெனைத் தன்னருளால் நீகொடுத்துப்
பாவியேனை பரிந்தேயாளவாய்
செடியாய தீவினைகளைந்த தீயானப் பெருமானே
செருக்கழித்த செம்மை யோகம
சித்தமல மறுவித்துத் திருவருளைப் பாலிக்கும்
சீமானே தெளிவாம தேனே
கடியார்ந்த கடப்பமலர் மாலைமணம் கமழுமார்பா
கதிர்வேலா கருணை நாதா
கரவில்லா உளத்தார்க் கருளளிக்கும்
கவினணிகைத் தேவ தேவே.

5. இல்லாமை என்னுமொரு பொல்லாத பாவியினால்
மனமுருகியான் இடருறாமல்
இரக்காமல் ஏற்பவர்கட் கில்லையெனச்
சொல்லாமல் இழிதொழில்கள் இயற்றிடாமல்
கல்லாத புல்லருடன் சேராமல் பிணிகளினால்
கலங்கிடாது துணிவுறாமல்
கற்றவர்கள் பால்புராணத் தாங்கித்துச்
சேராமல் காத்துன்றன் அருளை ஈவாய்
ஒவ்வாத செயலாளாய் ஏகாளிப்பவனை
உத்தமமாகக் கொள்ளாமல் விளங்குவோனே
உலகெங்கும் நிறைந்துயிர் உய்ந்திடவே
திருத்தணிகொண் டுறைகின்ற கருணையானே
சொல்லாலும் மனத்தாலும் தொடரவொண்ணாச்
சூக்குமனே தூயவடியார்க் கருள்வோனே
சுத்தமுத்த சுத்தனித்த என்றுசொலிச
சுருதிகடாம் துதிதணிகைத் தேவதேவே.

6. எத்தனைவி தத்துமுறை யிட்டாலும்
அத்தனைநின்றன எழிற்செவியில் ஏ[illegible]வில்லை
என் [illegible]யனமே [illegible] [illegible]டத்த முறை [illegible]வேனோ ஆ[illegible]பதீ
இ[illegible]ரூப [illegible] வமர்த்தி [illegible]ரோ
எத்துணைகோடை கனைக[illegible]காணு[illegible] [illegible] [illegible] [illegible]சது
எண்ணிலாபால் [illegible] [illegible] [illegible] வாகள்
[illegible]ளாய [illegible]னமைபினை [illegible]தாமல்
ஏக்குமய [illegible] [illegible] எசெயவேனோ இ[illegible] [illegible]தாய
சித்துருவை பாகுகுணற [illegible] செ [illegible] [illegible]
ணன்குடிவன் சிறீவா [illegible] [illegible]த்து
சசமுதுனற [illegible]தாறு [illegible] [illegible] [illegible]
லையாறி சிருதத்தலத்தில் [illegible]
இத்தகியே என்பால் [illegible] [illegible]
ஒருனுடைய இட[illegible]தனை [illegible]காபட [illegible]
எளைமேய [illegible] [illegible]செப்[illegible]
துணகடலை எழிற்றனிகைத் தேவதேவே

7. நற்குணமொன் றில்லாமல் நன்மேல் [illegible] பாவ [illegible]சாமல்
நற்கேள்வி கேட்டிடாமல்
நற்றவமுஞ் செய்யாமல் நல்லறமும் [illegible]ரியாமல்
நற்பூசை யுஞ்செய்யாமல்
துற்குணமே மிக்ககொண்டு [illegible] [illegible]ற்பல்லாயிர
தீவினைகள் துணி[illegible] செய்க[illegible] [illegible]யானே
தொல்வினைதான் இன்னதென அறியாமல் [illegible]
துயர்போக்கக் காப்பாய் ஐயா [illegible]மன்றன
நிற்குணனே நின்மலனே நித்தியனே
எனத்துதித்து நினைக்க தயவாக கருள்செய்வோனே
[illegible]ரூபியுமாய் ரூபியுமாய் இருப்பவனே [illegible]லமயில்
நீள்முதுகி லேறுவோனே
பற்குணனுக் கருளானுக் குபதேசஞ் செய்தோனே
பண்டிதனே தயவிலாத
பாவிகளுக் கெட்டாத பரம்பொருளே பத்தருளம்
பயில்தணிகைத் தேவ தேவே.

அம்புவியில் பெறற்கரிய பிறவி தனைப்
பெற்றுநல்ல அறச்செயல்கள் ஆற்றி டாமல்
அவச்செயலே செய்துபொல்லா மனவசப்பட்
டேயுழன்று ஆவியுய்ய வழிதே டாமல்
பம்புசெயும் வாழ்வைநம்பி வறியவாகட்
குதவிசெயும் வழிகொளாமல் மகிக லக்கும்
வன்பிணியால் மனநகலங்கி வாடுகின்றான்
நன்றாக வாழுநெறி செய்வாய் ஐயா
அம்புலியின் கலையிலொன்றை அணிந்தரிவன்
மகிழ்ந்தீன்ற அருங்குமரா அயிலார் வேலா
அருங்குன்றைப் பிளந்துசக் கீரரைக்காத்
தருள்புரிந்த ஆதியனே ஆண்மை யோனே
உம்பரென்றும் போற்றுகின்ற திருவாளா
கும்பமுனிக் குபதேசம் செய்தாண் டோனே
உலவாத புகழ்படைத்த அருணகிரி யார்போற்றும்
உயர்தணிகைத் தேவ தேவே.

9. அவலஞ்செய் வயிறதனை வளர்த்கிடப்பல்
தொழில்களைச்செய் தல்லலைக்கொண் டுழலுகின்றேன்
அவனிதனில் எனைப்போல அலைந்துமனம்
புண்ணுவார் யாருமிலை என்றுமென்பால்
கவலையே உளதுதனில் வலையின்கண் அகப்பட்ட
கலைமான்தான் கலங்கல் போலக்
கலங்குகின்றான் துயர்நீங்கி நல்வாழ்வைப்
பெற்றுமிகக் களித்துவாழ அருளீந் தாள்வாய்
மலையருள் பாலகனே வேட்டுவப்பெண் ணிணைமணந்த
வேதியனே வினைதீர்ப் போனே
வேதங்கள் போற்றுகின்ற விமலவடி வுடையவனே
வித்தகனே விண்ணோர் கோனே
தவலையெலாம் தீர்த்தருளும் பெம்மானே எம்மானே
சங்கரர்க்கு மகிழ்செய் வோனே
தடவரைக டோறுமகிழ்ந் துறைபவனே சரவணனே
தமிழ்தணிகைத் தேவ தேவே.

10 இல்லாததும் இல்லாமல் துறவாததும் இல்லாமல்
இனியஞானம் என்று சொல்லு
எழிலாததும் இல்லாமல் ஆணையே கட்டாமை மேல்
இசைத்திடவே ஆக்குகின்றோர்
நல்லனவே செய்கின்றார் மெய்யான ஞானரை
நன்னூலைக் கற்றிடாமல்
சொல்மலிவிழை உண்மைதனை நல்லியம்பச் சொல்கின்ற
நாயினேனை நயந்தெனை ஆள்வாய்
கல்லார்க்கும் கற்றவர்க்கும் நல்லோர்க்கும் களிப்பருளும்
கற்பகமே கருணைநாதா
கண்ணுதலோன் பதிமேவு கண்ணைத் துறந்து காட்சியுருவான ஐயா
நல்லார்கள் சோதலத்தில் வீற்றிருக்கும்
நாயகனே நமிநந்திவழி சூழும் பெரா
ஞாலமெல்லாம் நாடோறும் சரணமென்று போற்றுவோர்
ஏற்றணிசைத் தேவ தேவே.



வாழ்த்து.

தூயமா மறைகள் வாழ்க தூசேறும் சைவம் வாழ்க
மெய்யன்பு சிவன்றன் பூசை விழைந்திடும் அடியோர் வாழ்க
செய்யநல் லறங்கள் வாழ்க திருமுடி மன்னர் வாழ்க
பெய்யுமா மழைகள் வாழ்க பிழையிலா துலகம் வாழ்க.

உ

சிவமயம்.



திருத்தணிகை
ஸ்ரீ வள்ளிதேவசேனா சமேத
ஸ்ரீ செங்கல்வராயப்பெருமான்
திருப்பதிகம்.



திரு. புராணிகர்
காளத்தி-இ. சிதம்பரசாமி பாண்டியர் அவர்கள்
மாணவர்
திரு. இரா. கோவிந்தசாமி நாயுடு அவர்கள்
இயற்றியது.



கவுணியன் பதிப்பகம்
41, பிராட்வே, சென்னை.
1952.

புலவர் கருத்துரை.

சென்னை-சித்தாந்தப் பிரகாச சபைத்தலைவர்

வித்வான் திருவாளா பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்

எழுதிய வசனம்

செழுந்தமிழ்ச் சண்பா புராணிகர் திரு ரா. கோவிந்தசாமி நாயுடு அவர்களியற்றிய சீருத்தணிகைச் செங்கல்வராயர் பதிகத்தைக் கண்ணுற்றேன். அஃது எல்லோர்க்கும் பொருளெளிதின் விளங்கக் கூடிய இயற்சொற்களாலமையாகப்பெற்று இடையிடையே முன்னோர் மொழிப்பொருள் பல விரவி நிற்க, ஆசிரியர் அன்புறைந்த மனநிலையை விளக்கும் வகையால் அமைந்திலங்குகின்றது. 'சொற்பிறழின் வைத்தாரைய மங்கு வார்வைய போற்றுங்கிய செய்யவேள் சண்பா அவர்கள் கருத்தினை நாவேற்றுவிப்பாருமென அவனது திருவடித்த மலர்களை வழுத்துகின்றேன்.

சென்னை யகமென பிரஸ அதிபரும், 'நடராஜர் விண்ணப்பப் பாமாலை சிவகாமி அம்பாள் பாமாலை' 'சிவகாமி அம்பாள் துதி பலதேவர் தோத்திரகீர்த்தனை' என்னும் இப்பிரபந்தங்களின் ஆசிரியரும், அருந்தவ நெறியொழுகும் அறிஞரும், அடியேனுடைய அகத்திறங்களையாய்ந்த ஆவலருமாகிய புராணிகர் திருமிகு இரா. கோவிந்தசாமி நாயுடவர்கள் இயற்றிய திருத்தணிகைச் செங்கல்வராயர் பதிகம் அவருக்கேயன்றி உளமுவந்தோதுவார்க்கெல்லாம் உவகையின்பம் ஒருங்களிக்க வல்லதெனப்பொருந்தலையேயாம்

இங்ஙனம்

புராணிகர் காளத்தி இ. சிதம்பரசாமி பாண்டியர்.

சிவமயம்.

திருத்தணிகை
ஸ்ரீ வள்ளிதேவசேனை சமேத
ஸ்ரீ செங்கல்வராயப்பெருமான் திருப்பதிகம்

காப்பு—வெண்பா

சீரார் திருத்தணிகைச் செங்கல்வ ராயன்மேல்
நேரார் பதிகம் நிகழ்த்திடவே—ஏரார்
கரிமுகனைக்கொள மீதவே கடையேன் றனக்குப்
பரிவுதமிழ்ச் சொல்லீவாய் பார்த்து.

நூல்.

பதின்மூன்றுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

1. சீர்கொண்ட முருகா நின் திருமுகமும் திருவிழியும்
திருவாயின் தெய்வ நகையும்
திருமார்பும் திகழு திருமுப்புரி நூலும் திருவயிறும்
திருநுசுப்பும் திருமேனி நிறமும்
ஏர்கொண்ட எழிற்றோள்களும் எழிற்பூணும் இணையில்லா
எழிலடியும் எழிலார் வேலும்
எழிற்கோழிக் கொடியுமெழில் மணிமயிலும் கண்டுரு
இருவினைகள் இரியப்பெறுமென்றோ [முன்னை
நேர்கொண்ட சிவபெருமான் நுதற்கண்ணில் வந்தமரர்
நீடும்துன் பொழித்த வள்ளால
நினைந்துருகும் அடியவர்கட் கணிமயில்மேல் ஏறிவந்து
நீடருளைத் தந்தாள் வோனே
போர்கொண்ட சூரனுடல் பிளந்தமரர் துயரொழித்த
புகழோனே பொற்பு மிக்க
புண்ணியனே வரைகிழித்த திண்ணியனே எழில்வளரும்
பொழிற்றணிகைத் தேவ தேவே.

2. எண்ணரிய பிறவிதொறும் செய்துவந்த புண்ணியத்தால்
இம்மனிதப் பிறப்பெடுத்தும்
இச்சகத்தின் வாழ்வினைமெய் யென்றடியேன் நம்பியுனை
எண்ணாமல் இனையும் நெஞ்சில்
எண்ணற்கொண் ணாச்செயலை யெண்ணியெண்ணி
எய்துகின்ற இடர்தனுக் கெல்லை யில்லை
எத்தனைதான் புற்றாலும் நினதடியின் எழிற்புகழை
எடுத்துரைக்க வரமருள்வாய்
விண்ணவர்கள் பண்ணவர்கள் மண்ணவர்கள் வியந்தேத்தும்
வித்தகனே விமலச் சோனே
மெய்ம்மையனே தூய்மையனே யெனநின்னைத்
துதிப்போரை வியக்கவருள் செய்தாள்வோனே
எண்ணரிய பலகோடி அண்டங்க ளுடைமைகல்கி
இனிதளிக்கும் இறைமையோனே
இச்சாஞான கிரியா சத்திகளின் வடிவானை
எழிற்றணிகைத் தேவ தேவே.

3. மெய்யென்னும் பொய்யுடலை நிலையென்று நம்பியோனை
மேலோர்கள் வெறுக்குமடி தீய
மின்னாசை பொன்னாசை மண்ணாசை யெனுங்கடற்குள்
வீழ்ந்தலைந்து தரணி தன்னில்
உய்யுதற்குச் செய்நெறியை உணராமல் இடுக்கணுறும்
உழைத்தவென்பால் நீவர் தின்றனை
உண்மையுருக் காட்டியரு ளோட்டியையும் நெறிசாற்றி
ஒப்பிலருட் செல்வமீவாய்
செய்யவயில் தாங்கியவிர் தேசிகனே சின்மயனே
திண்மையனே திகழும் தேனே
சிவஞான முனிவர்களுக் கருள்புரியும் திரிபுராரி
திருமகனே தேவ ருய்ய
வெய்யவனும் சூரனைவென் றருளிந்த வேலவனே
மேலவனே சுரரும் வேண்டும்
வியனுலகோர் விரிஞ்சனரி முதலானோர் வியந்தேத்தி
விழைதணிகைத் தேவ தேவே.

4. மடியாத மனமென்னும் இருள்செறிந்த
பிறவியெனும் வனந்தன்னில் காமமென்னும்
மழைதன்னில் நனைந்துபொல்லா மாயையென்று
செப்புகின்ற வழியாக மருண்டு செல்கால்
படியாவைம் புலவேடர் கைதன்னில் நான்சிக்கிப்
பகரறிவாம் பெருந்த னதனைப்
பறிகொடுத்தே கலங்குமெனக் கின்னருளோ நீகொடுத்துப்
பாவியேனை பரிந்தே யாள்வாய்
செடியாய தீவினைக்குத் தீயான பெருமானே
செருக்கறுத்த செம்மை யோரகம்
சித்தமல மறுவித்துத் திருவருளைப் பாலிக்கும்
சீமானே தெளிவாம் தேனே
கடியார்ந்த கடப்பமலர் மாலைமணம் கமழ்மார்பா
கதிர்வேலா கருணை நாதா
களவில்லா உள்ளத்தார்க் கருளளிக்கும்
கவின்றணிகைத் தேவ தேவே.

5. இல்லாமை என்றுமொரு பொல்லாத பாவியினால்
என்றுமியான் இடருறாமல்
ஏற்காமல் ஏற்பவர்கட் கில்லையெனச்
சொல்லாமல் இழிதொழில்க ளியற்றிடாமல்
கல்லாத புல்லருடன் சேராமல் பிணிகளினால்
கலங்கிமிக துணிவுறாமல்
கற்றவர்கள் பால்பூரணைத் தூக்கித்துச்
சேராமல் காத்துன்றன் அருளை ஈவாய்
ஒல்லாத செயலாளர்க் கொளிப்பவனே
உத்தமர்கட் கொளியாமல் விளங்குவோனே
உலகெங்கும் நிறைந்துமுயிர் உய்ந்திடவே
திருத்தணிகொண் டுறைகின்ற கருணையானே
சொல்லாலும் மனதாலும் தொடரவொண்ணாச்
சூக்குமனே தூயவடியார்க் கருள்வோனே
சத்தமுத்த கத்தனித்த என்றுசொலிச்
சுருதிகடாம் துதிதணிகைத் [illegible]

6. எத்தனைவி தத்துமுறை யிட்டாலும்
அதனைநின்றன் எழிற்செவியில் ஏற்க வில்லை
எனையேன்வே றெவரிடத்து முறையிடுவேன் இப்படிநீ
இருப்பதுவும் நீதி தானோ
எத்தனைநோய் களைக்கொண்டு துன்புறுவேன் மருந்து
எண்ணிலர்பால் மருந்தை யணுடு [வர்கள்
எள்ளளவும் நன்மையினை எய்தாமல்
எங்குயான் என்னசெய்வேன் இறைவா எந்தாய்
சித்தருலா பரங்குன்றம் செந்திலாவி
னன்குடிவள கிரேவா கந்தழைந்து
திகழ்குன்ற தோறாடல் பழமுதிர்சோ
லையாதி திருத்தலத்தில் மேவும் கந்தா
இத்தரையே என்பால்நீ விரைவுடன்வந்
தென்னுடைய இடர்தனைத் தீர்ப்பாய் ஐயா
ஏழையேனைப் பிழைசெயினும் பொறுத்தாள்வாய்
தென்கடலும் எழிற்றணிகைத் தேவதேவே.

7. நற்குணமொன் றில்லாமல் நல்லோர்பால் சேராமல்
நற்கேள்வி கேட்டி டாமல்
நற்றவமுஞ் செய்யாமல் நல்லறமும் புரியாமல்
நற்பூசை யுஞ்செய் யாமல்
துற்குணமே மிகக்கொண்டு பற்பலவாம்
தீவினைகள் துணிவுடனே செய்கின்றேன் யான்
தொல்வினைதான் இன்னதென அறியாமல் உழலு
துயர்போக்கிக் காப்பாய் ஐயா [மென்றன்
நிற்குணனே நின்மலனே நித்தியனே
எனைத்துதித்து நினைக்குமன்பர்க் கருள்செய் வோனே
நிரூபியுமாய் ரூபியுமாய் இருப்பவனே நீலமயில்
நீள்முதுகி லேறு வோனே
பற்குணனுக் கருளானுக் குபதேசஞ் செய்ஞான
பண்டிதனே தயவி லாத
பாவிகளுக் கெட்டாத பரம்பொருளே பத்தருளம்
பயில்தணிகைத் தேவ தேவே.

8. அம்புவியில் பெறற்கரிய பிறவிதனைப்
பெற்றுநல்ல அறச்செயல்கள் ஆற்றி டாமல்
அவச்செயலே செய்துபொல்லா மனவசப்பட்
டேயுழன்று ஆவியுய்ய வழிதேடாமல்
வம்புசெயும் வாழ்வைநம்பி வறியவர்கட்
குதவிசெயும் வழிகொளாமல் மதிகலக்கும்
வன்பிணியால் மனங்கலங்கி வாடியயான்
நன்றாக வாழுநெறி செய்வாய் ஐயா
அம்புலியின் கலையிலொன்றை அணிந்தசிவன்
மகிழ்கின்ற அருட்குமரா அயிலார் வேலா
அருங்குன்றைப் பிளந்துநக் கீரனைக்காத்
தருள்புரிந்த ஆதியனே ஆண்மை யோனே
உம்பரென்றும் போற்றுகின்ற திருவாளா
கும்பமுனிக் குபதேசம் செய்தாண் டோனே
உலவாத புகழ்படைத்த அருணகிரி யார்போற்றும்
ஐயா தணிகைத் தேவ தேவே.

9. அவலஞ்செய் வயிறதனை வளர்த்திடப்பல்
தொழில்களைச்செய் தல்லலைக்கொண் டுழலுகின்றேன்
அவனிதனில் எனைப்போல அலைந்துமனம்
புண்ணுறுவார் யாருமிலை என்றும்என்பால்
லையே உளத்துறல் வலையின்கண் அகப்பட்ட
கலைமான்தான் கலங்கல் போலக்
கலங்குமியான் துயர்நீங்கி நல்வாழ்வைப்
பெற்றுமிகக் களித்துவாழ அருளீந் தாள்வாய்
விமலையருள் பாலகனே வேட்டுவப்பெண் ணிணைமணந்த
வேதியனே வினைதீர்ப் போனே
வேதங்கள் போற்றுகின்ற விமலவடி வுடையவனே
வித்தகனே விண்ணோர் கோனே
மலையெலாம் தீர்த்தருளும் பெம்மானே எம்மானே
சங்கரர்க்கு மகிழ்செய் வோனே
தடவரைக டோறுமகிழ்ந் துறைபவனே சரவணனே
தணிகைத் தேவ தேவே.

10. இல்லறத்தும் நில்லாமல் துறவறத்தும் இல்லாமல்
இனியஞானம் என்று சொல்லும்
எழிலறத்தும் நில்லாமல் இரண்டுங்கெட்டானென்றே
இசைத்திடவே இருக்கின்றேன்
நல்லனவே செய்கின்ற நல்லறநெறி நண்ணாமல்
நன்னூலைக் கற்றிடாமல்
ஞாலம்விழை உண்மைதனை நல்லாமல் நலிகின்ற
நாயினேனை நயந்தென்றுள்வாய்
கல்லார்க்கும் கற்றவர்க்கும் நல்கின்றே களிதருநும்
கற்பகமே கருணை நாதா
கண்ணுதலோன் புத்திரனே கணணைதருஞல் காணுகின்ற
காட்சியுருவான ஐயா
நல்லார்கள் சேர்தலத்தில் வீற்றிருக்கும்
நாயகனே நளிருவரி சூழப் பெற்ற
ஞாலமெலாம் நாடோறும் கிரண்வைத்து போற்றுகின்ற
நற்றணிகைத் தேவ தேவே.



வாழ்த்து.

துய்யமா மறைகள் வாழ்க துசிபெறும் சைவம் வாழ்க
மெய்யனும் சிவன்றன் பூசை விழைந்தியற் றிடுவோர் வாழ்க
செய்யநல் லறங்கள் வாழ்க திருமுடி மன்னர் வாழ்க
பெய்யுமா மழைகள் வாழ்க பிழையிலா துலகம் வாழ்க.